IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.236/2019

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SRIDEVI |
| HUSBAND NAME | : | KRISHNAMOORTHI |
| VILLAGE | : | BANGALORE |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 9th day of july 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

1வது எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரியை தெரியும். அவர் எனது கணவர் ஆவார். 2வது எதிரி பூபதியம்மாள் எனது மாமியார் , 3வது எதிரி வடிவேல் கணவரின் அண்ணன் ஆவார். எனக்கும், 1வது எதிரிக்கும், 01.06.2006 அன்று திருமணம் நடந்தது. திருமணம் ஆன நாள் முதல் எனது மாமியாரும், மூத்தாரும் வரதட்சணை கேட்டு என்னை கொடுமை செய்து வந்தனர். கடந்ம 2014ம் வருடம் ஒரு நாள் எனது கணவரின் அண்ணன் கவிதா என்பவரை வீட்டிற்கு அழைத்து வந்து எனது கணவருக்கு திருமணம் செய்து வைக்கபோவதாக சொன்னார்கள். அதனால் நான் குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் புகாரை குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்தேன். நான் எந்த தேதியில் புகார் அளித்தேன் என்று எனக்கு தெரியாது. மேற்படி புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியும். புகாரில் உள்ள விவரங்களைதான் நான் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. எனக்கு 3 குழந்தைகள் உள்ளர்கள். முதல் குழந்தையின் பெயர் கிரிராஜ், 2வது குழந்தையின் பெயர் ஹர்ஷ்ன், 3வது குழந்தையின் பெயர் மதுமிதா ஆகும். எனது முதல் பையன் கிரிராஜ் தற்போது கல்லூரியில் படித்து வருகிறார். எனது மகனை எனது கணவர்தான் படிக்க வைத்து வருகிறார்.

3. எனது 2வது மகன் ஹர்ஷ்ன் முதலாம் ஆண்டு கல்லூரி படித்து வருகிறார். 3வது மகள் 8 ஆம் வகுப்பு படித்து வருகிறார். 3வது மகள் மதுமிதா என்னுடன்தான் வசித்து வருகிறார். எனது 2வது மகளையும் எனது கணவர்தான் படிக்க வைத்து வருகிறார்.

4. நானும், எனது கணவரும் 15 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எதிரியும் அவரது குடும்பத்தாரும் எந்த வரதட்சணையும் கேட்கவில்லை என்றாலும், நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1வது எதிரி 2வது திருமணம் செய்து கொண்டதாக வழக்கில் சம்பந்தம் இல்லாமல் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. 15 வருங்களாக 1வது எதிரி குழந்தைகளை சிரமப்பட்டு படிக்க வைத்து, வளர்த்து வருகிறார் என்றாலும், நான்தான் சேர்ந்து வாழாமல் பெங்களூரில் வசதியாக வாழ்ந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

Sd/-R.Saranya, ,
Judicial Magistrate,
Gudiyatham.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.236/2019

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | KANAGAPOOSANAM |
| HUSBAND NAME | : | NADARAJ |
| VILLAGE | : | BANGALORE |
| OCCUPATION | : | HOTEL |
| AGE | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 9th day of july 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

1வது எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். ஆஜர் 1வது எதிரி எனது மருமகன் ஆவார். எனது மகளுக்கம், 1வது எதிரிக்கும், 01.06.2006 அன்று திருமணம் நடந்தது. எனது மகளுக்கு 3 குழந்தைகள் உள்ளனர். தேதி, மாதம் வருடம் ஞாபகம் இல்லை. 15 வருடங்களுக்கு முன்பு எனது மருமகனின் அண்ணன் வேறொரு பெண்ணை அழைத்து வந்து வீட்டில் வைத்து எனது மருமகனுக்கு 2வது திருமணம் செய்து வைக்கபோவதாக எனது மகள் சொன்னார். நாங்கள் சென்று கேட்டபோது அந்த பெண் மயக்கம்போட்டு விழுந்துவிட்டார். எனது மருமகனும், அவரது அண்ணனும் அந்த பெண்ணை அழைத்து செல்வதுபோல் சென்றுவிட்டனர். எனது மகள் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். வழக்க சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். 1வது எதிரி யாரோ ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதாக எனக்கு கேள்விப்பட்டுதான் தெரியும். நான் நேரடியாக பார்க்கவில்லை. 1வது எதிரி எந்த திருமணமும் செய்யவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு பத்திரிக்கை வந்தது. எனக்கு பத்திரிக்கை எதுவும் வரவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1வது எதிரி சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றாலும், எனது மகள்தான் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்றாலும் சரியல்ல.